**கால அளவு :** 7 நாள்

**செயல்திட்ட எல்லை :** பாரம்பரிய விளையாட்டுகள்

**தேவையானவை :**

பழங்காலப் பெண்கள் பயன்படுத்திய விளையாட்டுப் பொருள்கள்

**வாழ்வியல் தொடர்பு :**

உன் ஊரில் வாழும் மூத்தோர்களிடம் கலந்துரையாடி விளையாட்டு வகைகளையும் விளையாடுவதால் ஏற்படும் நன்மைகளையும் அறிந்துகொள்ளுதல்

**செயல்படுத்தும் முறை :**

- மாணவர்கள், தமது குடும்பத்திலோ ஊரில் வாழும் பெரியோர்களிடமோ பாரம்பரிய விளையாட்டுகளைப் பற்றிக் கேட்டறிந்து பட்டியலிடுதல்

**மதிப்பீடு :**

மதிப்பீட்டுக் கூறுகளைப் பின்பற்றி மதிப்பீடு செய்து, மாணவர்களின் தனித்திறனைப் பாராட்டுதல்

**மதிப்பீட்டுப் படிவம்**

| வ.எண் | உட்கூறுகள் | முயற்சி தேவை | திருப்திகரம் | நன்று | சிறப்பு நிலை |
|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 |
| 1 | கலந்துரையாடல் | | | | |
| 2 | பழைமையான விளையாட்டுகளைச் சேகரித்தல் | | | | |
| 3 | வேறுபடுத்துதல் | | | | |
| 4 | காரண காரியம் கண்டறிதல் | | | | |
| 5 | எடுத்துரைத்தல் | | | | |

| | | |
|---|---|---|
| **வகுப்பு** | **:** | **ஏழு** |
| **பருவம்** | **:** | **மூன்று** |
| **இயல்** | **:** | **ஒன்று** |
| **பாடம் : செய்யுள்** | **:** | **பொங்கல் வழிபாடு** |
| **செயல்திட்டத் தலைப்பு** | **:** | **தமிழர் திருநாள் தகவல் சேகரித்தல்** |
| **செயல்பாடு** | **:** | **தனியொருவர்** |

**நோக்கம் :**

- தமிழர்களுக்கே உரித்தான தனித்துவம் மிக்க திருவிழாவையும் அதன் சிறப்பினையும் அறிதல்
- தமிழர்கள் கொண்டாடும் விழாக்கள், பண்டிகைகள் பற்றிய விவரங்களைச் சேகரித்து தொகுக்க அறிதல்
- தொகுக்கப்பட்ட கருத்துகளைக் கட்டுரையாக எழுதி அளிக்கும் திறன் பெறுதல்
- உழவுக்கு உதவும் உயிருள்ளவை, உயிரற்றவை என அனைத்திற்கும் நன்றி கூறுதலை விழாவாகக் கொண்டாடும் தமிழர்களின் மாண்பினை உணர வைத்தல்

**கால அளவு :** 7நாள்

**செயல்திட்ட எல்லை :**

பொங்கல் விழா மலர், நூலக நூல்கள், முதியோர், பெற்றோர், ஆசிரியர் முதலியோரிடம் பொங்கல் விழா குறித்துப் பெறப்பட்ட வாய்மொழிக் கருத்துகள்.

**சிந்தனையைத் தூண்டும் வினாக்கள்:**

- தமிழர் கொண்டாடக்கூடிய விழாக்கள், பண்டிகைகள் என்னென்ன ?
- நன்றியைப் பறைசாற்றும் விதமாகத் தமிழர்கள் கொண்டாடும் திருவிழா எது ?
- நீ யாருக்கெல்லாம் நன்றி கூறுவாய் ? ஏன் ?
- உழவுத்தொழிலில் மாடுகளின் பங்கென்ன ? ஏன் ?
- போகித் திருவிழா என்றால் என்ன ?
- பொங்கல் திருவிழாவில் பயன்படுத்தப்படும் விளைபொருள்களை வரிசைபடுத்துக.

**செயல்படுத்தும் முறை :**

- சிந்தனையைத் தூண்டும் வினாக்கள்மூலம் மாணவர்களைச் செயல்திட்டத்திற்கு ஆயத்தப்படுத்துதல்
- பொங்கல் பண்டிகை தொடர்பான செய்திகளை முறையாகத் தொகுத்தல்
- தொகுத்தவற்றை வாய்மொழியாகச் சொல்லச் செய்தல்
- பொங்கலைப் பற்றிய செய்திகளைப் படங்களாக, செய்திகளாகத் தொகுத்து ஒப்படைப்புத் தயாரித்தல்

**வாழ்வியல் தொடர்பு:**

தமிழரின் திருவிழாக்களுக்கான காரணமறிந்து விழாவைக் கொண்டாடுதல்

**மதிப்பீடு :**

மதிப்பீட்டுக் கூறுகளைப் பின்பற்றி மதிப்பீடு செய்து, மாணவர்களின் தனித்திறனைப் பாராட்டுதல்

**மதிப்பீட்டுப் படிவம்**

| **வ.எண்** | **உட்கூறுகள்** | **முயற்சி தேவை** | **திருப்திகரம்** | **நன்று** | **சிறப்பு நிலை** |
|---|---|---|---|---|---|
| | | **1** | **2** | **3** | **4** |
| 1 | தகவல் சேகரித்தல் | | | | |
| 2 | சேகரித்தவற்றை வகைப்படுத்தி முறைப்படுத்துதல் | | | | |
| 3 | தகவல்களைப் படங்களுடன் தொகுத்தல் | | | | |
| 4 | வகுப்பில் பகிர்ந்துகொள்ளல் | | | | |
| 5 | ஒப்படைப்பின் ஒழுங்கு | | | | |

**வகுப்பு : ஏழு**

**பருவம் : மூன்று**

**இயல் : ஒன்று**

**பாடம் : உரைநடை : இயற்கை வேளாண்மை**

**செயல்திட்டத் தலைப்பு : இயற்கை வளங்களைப் பாதுகாத்தல்**

**செயல்பாடு : தனியொருவர்**

**நோக்கம் :**

- நிலம், நீர், காற்று மாசுபடாமல் பாதுகாத்தல்
- மாசு ஏற்படுவதற்கான காரணம் அறிதல்
- மாசில்லா உலகம் அமைவதற்குச் செய்ய வேண்டியனவற்றை அறிதல்
- சுற்றுப்புறத்தைப் பாதுகாக்கும் முறைகள் அறிதல்

**கால அளவு :** 5 நாள்

**செயல்திட்ட எல்லை :** பாடநூல், வாழும் ஊர், வேளாண்மை செய்யும் விளைநிலம்

**சிந்தனையைத் தூண்டும் வினாக்கள்:**

- இயற்கை வளங்கள் எவையெவை ?
- மனிதர்கள் உயிர்வாழத் தேவையானவை எவை ?
- நிலம், நீர், காற்று மாசுபடுதல் பற்றி அறிந்திருக்கிறாயா ?
- இயற்கை, செயற்கை உரங்கள் எவையெவை ?
- உன் கிராமத்தில் பயிரிடப்படும் பயிர்கள் என்னென்ன ?
- மண்புழு உரம் தயாரிப்பதைப் பார்த்துள்ளாயா ?
- உழவர்களின் நண்பர்களாக உள்ள உயிரினங்கள் யாவை ?

**செயல்படுத்தும் முறை :**

- நிலம், நீர், காற்று பற்றிய தகவல்களைச் சேகரித்தல்
- நிலத்தில் உருவாகும் பயிர்களைத் தொகுத்தல்
- இயற்கை மாசுபடுத்துவதில் பிளாஸ்டிக்கின் பங்கினைத் தொகுத்தல்
- இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதனால் விளையும் நன்மைகளைப் பட்டியலிடுதல்
- வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படும் உரங்களைப் பட்டியலிடுதல்
- பாதுகாப்பான உலகம் அமைவதற்கான செய்திகளைச் சேகரித்தல்
- சேகரித்தவற்றைத் தொகுத்தல்
- ஒப்படைத்தல்

**வாழ்வியல் தொடர்பு :**

இயற்கை வளங்களை மாசுபடாமல் பயன்படுத்தி நுகரக் கற்றுக்கொள்ளுதல்

**மதிப்பீடு :**

மதிப்பீட்டுக் கூறுகளைப் பின்பற்றி மதிப்பீடு செய்து, மாணவர்களின் தனித்திறனைப் பாராட்டுதல்

**மதிப்பீட்டுப் படிவம்**

| வ.எண் | உட்கூறுகள் | முயற்சி தேவை | திருப்திகரம் | நன்று | சிறப்பு நிலை |
|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 |
| 1 | இயற்கை வளங்களை இனங்காணல் | | | | |
| 2 | தகவல் சேகரித்தல் | | | | |
| 3 | தகவல்களைத் தொகுத்தல் | | | | |
| 4 | வகுப்பில் பகிர்ந்துகொள்ளல் | | | | |
| 5 | ஒப்படைப்பின் ஒழுங்கு | | | | |

11

**வகுப்பு : ஏழு**

**பருவம் : மூன்று**

**பாடம் : உரைநடை : ஓவியக்கலை**

**செயல்திட்டத் தலைப்பு : 64 கலைகளைத் தொகுத்து நிகழ்த்திக் காட்டல்**

**செயல்பாடு : தனியொருவர்**

**நோக்கம் :**

- 64 கலைகள் எவையெவை என அறியும் திறன் பெறுதல்
- 64 கலைகளைத் தொகுத்தல்
- ஏதேனும் ஒரு கலையில் பயிற்சி பெற்று நிகழ்த்திக் காட்டுதல்

**கால அளவு :** 15 நாள்

**செயல்திட்ட எல்லை :** அபிதான சிந்தாமணி, நூலகப் புத்தகங்கள்

**சிந்தனையைத் தூண்டும் வினாக்கள்:**

- கலை என்றால் என்ன ?
- உனக்குத் தெரிந்த கலைகள் யாவை ?
- பாடுதல், சமைத்தல், ஆடுதல், ஓவியம் வரைதல் போன்றன கலைகளா ?

❖ உனக்குப் பிடித்த கலை எது ? ஏன் ?
❖ கலைகள் பற்றிய செய்திகளை எங்கிருந்து பெறலாம் ?
❖ உங்கள் ஊரில் நடைபெறும் கலைகள், கூத்துகள் பற்றிச் சிந்திக்க.

**செயல்படுத்தும் முறை :**

➢ கலைகள் பற்றிய முன்னறிவை மாணவர்களுக்கு எடுத்துரைத்தல்
➢ அபிதான சிந்தாமணி நூலிலிருந்து 64 கலைகளைத் தொகுத்தல்
➢ தெரிந்த கலைகளை வரிசைபடுத்துதல்
➢ ஏதேனும் ஒரு கலையில் பயிற்சி பெறுதல்
➢ நிகழ்த்திக்காட்டுதல்
➢ தொகுத்து ஒப்படைத்தல்

**வாழ்வியல் தொடர்பு :**

கலைகளோடு இணைந்த தமிழர் வாழ்க்கை முறையை உணர்ந்துகொள்ளல்

**மதிப்பீடு :**

மதிப்பீட்டுக் கூறுகளைப் பின்பற்றி மதிப்பீடு செய்து மாணவர்களின் தனித்திறனைப் பாராட்டுதல்

**மதிப்பீட்டுப் படிவம்**

| வ.எண் | உட்கூறுகள் | முயற்சி தேவை | திருப்திகரம் | நன்று | சிறப்பு நிலை |
|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 |
| 1 | கலைகள் பற்றிய அறிவு | | | | |
| 2 | கலைகளைத் தொகுத்த முறை | | | | |
| 3 | தெரிந்த கலைகளைத் தொகுத்தல் | | | | |
| 4 | கலையை நிகழ்த்திய முறை | | | | |
| 5 | ஒப்படைப்பின் ஒழுங்கு | | | | |

| | | |
|---|---|---|
| **வகுப்பு** | **:** | **ஏழு** |
| **பருவம்** | **:** | **மூன்று** |
| **இயல்** | **:** | **மூன்று** |
| **பாடம் : துணைப்பாடம்** | **:** | **கொடைக்குணம்** |
| **செயல்திட்டத் தலைப்பு** | **:** | **இலக்கிய மன்ற விழாவைத் திட்டமிடுதல், செயல்படுத்துதல்** |
| **செயல்பாடு** | **:** | **குழு** |

**நோக்கம் :**

- விழாவைத் திட்டமிட்டுச் செயல்படுத்தும் திறன் பெறுதல்
- அச்சம், கூச்சமின்றிப் பேசும் திறன் பெறுதல்
- படைப்பாற்றல் திறன் பெறுதல்
- பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்ளுதல், தனித்திறனை வெளிப்படுத்தும் திறன் பெறுதல்

**கால அளவு :** 5 நாள்

**செயல்திட்ட எல்லை :** பள்ளி, வகுப்பறை, ஆசிரியர், மாணவர்கள்

**சிந்தனையைத் தூண்டும் வினாக்கள்:**

- உனது பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழாவில் கலந்துகொண்ட அனுபவம் உண்டா ?
- இலக்கிய மன்ற விழாவில் நடைபெறும் நிகழ்ச்சிகள் என்னென்ன ?
- நீ மேடையேறிப் பேசிய அனுபவம் உண்டா ?
- இலக்கிய மன்றவிழா நிகழ்ச்சி நிரல் தயாரித்த அனுபவம் உண்டா ?

**செயல்படுத்தும் முறை :**

- குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்
- பொறுப்புகளைப் பகிர்ந்தளித்தல்
- நிகழ்ச்சி நிரலை வரிசைப்படுத்தித் தயாரித்தல்
- நிகழ்ச்சிக்குச் சிறப்பு விருந்தினரை அழைத்தல்
- தலைமையாசிரியர், வகுப்பாசிரியருடன் கலந்துரையாடல்
- நிகழ்ச்சிகளைத் தொகுத்துச் செயல்திட்டமாக ஒப்படைத்தல்
- மன்ற விழாவை நடத்துதல்

**வாழ்வியல் தொடர்பு :**

விழாவை நடத்தவும், அச்சம் கூச்சமின்றிப் பேசவும், நாடகங்களை நடத்தவும், குழு மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளவும் கற்றுக்கொள்வர்.

**மதிப்பீடு :**

மதிப்பீட்டுக் கூறுகளைப் பின்பற்றி மதிப்பீடு செய்து, மாணவர்களின் தனித்திறனைப் பாராட்டுதல்

**மதிப்பீட்டுப் படிவம்**

| வ.எண் | உட்கூறுகள் | முயற்சி தேவை | திருப்திகரம் | நன்று | சிறப்பு நிலை |
|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 |
| 1 | குழுவாகச் செயல்பட்ட முறை | | | | |
| 2 | நிகழ்ச்சி தயாரித்த முறை | | | | |
| 3 | தொகுத்தளித்தல் | | | | |
| 4 | செயல்படுத்திய முறை | | | | |
| 5 | ஒப்படைப்பின் ஒழுங்கு | | | | |

## வாழ்க்கைக்குறிப்புப் படிவம்

| |
|---|
| தமிழறிஞரின் படம் ஒட்டவும் |

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | : | |
| சிறப்புப் பெயர் | : | |
| பெற்றோர் | : | |
| பிறந்த ஊர், மாவட்டம் | : | |
| காலம் | : | |
| கல்வி | : | |
| இயற்றிய நூல்கள் | : | |
| தமிழ்த்தொண்டு | : | |
| நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள் | : | |

| | | |
|---|---|---|
| **வகுப்பு** | : | **ஏழு** |
| **பருவம்** | : | **மூன்று** |
| **இயல்** | : | **மூன்று** |
| **பாடம் : துணைப்பாடம்** | : | **கொடைக்குணம்** |
| **செயல்திட்டத் தலைப்பு** | : | **இலக்கிய மன்ற விழாவைத் திட்டமிடுதல், செயல்படுத்துதல்** |
| **செயல்பாடு** | : | **குழு** |

**நோக்கம் :**

- விழாவைத் திட்டமிட்டுச் செயல்படுத்தும் திறன் பெறுதல்
- அச்சம், கூச்சமின்றிப் பேசும் திறன் பெறுதல்
- படைப்பாற்றல் திறன் பெறுதல்
- பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்ளுதல், தனித்திறனை வெளிப்படுத்தும் திறன் பெறுதல்

**கால அளவு :** 5 நாள்

**செயல்திட்ட எல்லை :** பள்ளி, வகுப்பறை, ஆசிரியர், மாணவர்கள்

**சிந்தனையைத் தூண்டும் வினாக்கள்:**

- உனது பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழாவில் கலந்துகொண்ட அனுபவம் உண்டா ?
- இலக்கிய மன்ற விழாவில் நடைபெறும் நிகழ்ச்சிகள் என்னென்ன ?
- நீ மேடையேறிப் பேசிய அனுபவம் உண்டா ?
- இலக்கிய மன்றவிழா நிகழ்ச்சி நிரல் தயாரித்த அனுபவம் உண்டா ?

**செயல்படுத்தும் முறை :**

- குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்தல்
- பொறுப்புகளைப் பகிர்ந்தளித்தல்
- நிகழ்ச்சி நிரலை வரிசைப்படுத்தித் தயாரித்தல்
- நிகழ்ச்சிக்குச் சிறப்பு விருந்தினரை அழைத்தல்
- தலைமையாசிரியர், வகுப்பாசிரியருடன் கலந்துரையாடல்
- நிகழ்ச்சிகளைத் தொகுத்துச் செயல்திட்டமாக ஒப்படைத்தல்
- மன்ற விழாவை நடத்துதல்

**வாழ்வியல் தொடர்பு :**

விழாவை நடத்தவும், அச்சம் கூச்சமின்றிப் பேசவும், நாடகங்களை நடத்தவும், குழு மனப்பான்மையை வளர்த்துக்கொள்ளவும் கற்றுக்கொள்வர்.

**மதிப்பீடு :**

மதிப்பீட்டுக் கூறுகளைப் பின்பற்றி மதிப்பீடு செய்து, மாணவர்களின் தனித்திறனைப் பாராட்டுதல்

**மதிப்பீட்டுப் படிவம்**

| **வ.எண்** | **உட்கூறுகள்** | **முயற்சி தேவை** | **திருப்திகரம்** | **நன்று** | **சிறப்பு நிலை** |
|---|---|---|---|---|---|
| | | **1** | **2** | **3** | **4** |
| 1 | குழுவாகச் செயல்பட்ட முறை | | | | |
| 2 | நிகழ்ச்சி தயாரித்த முறை | | | | |
| 3 | தொகுத்தளித்தல் | | | | |
| 4 | செயல்படுத்திய முறை | | | | |
| 5 | ஒப்படைப்பின் ஒழுங்கு | | | | |

# எட்டாம் வகுப்பு
# தமிழ்

| | | |
|---|---|---|
| **வகுப்பு** | **:** | **எட்டு** |
| **பருவம்** | **:** | **முதற் பருவம்** |
| **இயல்** | **:** | **மூன்று** |
| **பாடம் : செய்யுள்** | **:** | **நளவெண்பா** |
| **செயல்திட்டத் தலைப்பு** | **:** | **அகரமுதலி தயாரித்தல்** |
| **செயல்பாடு** | **:** | **குழு** |

**நோக்கம் :**

- சொற்களுக்கான பொருளை அறிதல்
- அகர வரிசைப்படுத்தும் முறையைத் தெரிந்துகொள்ளல்
- புதிய சொற்களைக் கண்டறிதல்
- ஒரு சொல்லுக்கான அனைத்துப் பொருள்களையும் அறிதல்

**கால அளவு :** 4 நாள்

**தேவையான பொருள்கள் :** எட்டாம் வகுப்பு – முதல்பருவத் தமிழ்ப்பாட நூல்

**செயல்திட்ட எல்லை :** நளவெண்பாவில் இடம்பெறும் அருஞ்சொற்பொருள்

**சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் :**

- அகரமுதலி என்பது யாது ?
- அகரமுதலியைப் பயன்படுத்துவதன் நோக்கமென்ன ?
- உனக்குத் தெரிந்த அகரமுதலியின் பெயர்களைக் கூறுக.
- அகரமுதலியில் வேறு எவற்றையெல்லாம் அறிந்துகொள்ளலாம் ?

**செயல்படுத்தும் முறை :**

- நளவெண்பாவில் இடம்பெறும் அருஞ்சொற்களைப் பட்டியலிடச் செய்தல்
- பட்டியலில் இடம்பெற்றுள்ள சொற்களை அகரவரிசைப்படுத்துதல்
- அகரமுதலி தயார் செய்து ஒப்படைத்தல்
- அருஞ்சொற்களுக்கான பொருளை அறிதல்

**வாழ்வியல் தொடர்பு:**

- அகரமுதலியைப் பயன்படுத்தும் முறையை அறிதல்
- பாட அகரமுதலி தயாரிக்கும் முறையை அறிதல்

**மதிப்பீடு, பாராட்டு :**

பின்வரும் உட்கூறுகளின் அடிப்படையில் மாணவர்களை மதிப்பீடு செய்து பாராட்டுதல்

| வ.எண் | உட்கூறுகள் | முயற்சி தேவை | திருப்திகரம் | நன்று | சிறப்பு நிலை |
|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 |
| 1 | அருஞ்சொற்களைப் பட்டியலிடுதல் | | | | |
| 2 | சொற்பொருளை அறிதல் | | | | |
| 3 | அகரவரிசைப்படுத்துதல் | | | | |
| 4 | தொகுத்தல் | | | | |
| 5 | ஒப்படைப்பின் ஒழுங்கு | | | | |

**வகுப்பு : எட்டு**

**பருவம் : முதற் பருவம்**

**இயல் : ஒன்று**

**பாடம் : இலக்கணம் : தொகைச்சொற்கள்**

**செயல்திட்டத் தலைப்பு : தொகைச் சொற்களை விரித்துப் பட்டியலிடுதல்**

**செயல்பாடு** : குழு

**நோக்கம் :**

- தொகைச்சொற்களைப் பற்றி அறிந்துகொள்ளுதல்
- ஒரு சொல்லைப் பிரித்து, அதில் பொதிந்துள்ள பல சொற்களைக் கண்டறிதல்
- விரித்தெழுதுதல் திறன் பெறுதல்
- தொகைச்சொற்களுக்கான பொருளை அறிதல்

**கால அளவு : 3** நாள்

**செயல்திட்ட எல்லை :**

ஏழிசை, நவமணிகள், ஐம்புலன்கள், ஐம்பூதங்கள், நவதானியங்கள் இவை போன்ற பத்துத் தொகைச்சொற்கள்

**சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் :**

- தொகைச்சொற்கள் என்றால் என்ன ?
- முக்கனி – இத்தொகைச்சொல்லை விரித்தெழுதுக.

❖ முத்தமிழ், மூவேந்தர் – விரித்தெழுதுக.

**செயல்படுத்தும் முறை :**

- ஒவ்வொரு குழுவும் பத்துத் தொகைச்சொற்களைக் கண்டறிதல்
- 5 பேர் கொண்ட குழு, தொகைச்சொற்களைக் கண்டறிந்து கலந்துரையாடி விரித்தெழுதச் செய்தல்
- தொகுக்கப்பட்ட சொற்களைச் சரிபார்த்தல்

**வாழ்வில் தொடர்பு :**

நடைமுறை வாழ்க்கையில் தொகைச்சொற்களுக்கான பொருளை அறிதல்

**மதிப்பீடு, பாராட்டு :**

பின்வரும் உட்கூறுகளின் அடிப்படையில் மாணவர்களை மதிப்பீடு செய்து பாராட்டுதல்

| வ.எண் | உட்கூறுகள் | முயற்சி தேவை | திருப்திகரம் | நன்று | சிறப்பு நிலை |
|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 |
| 1 | தேர்ந்தெடுத்தல் | | | | |
| 2 | விரித்துரைத்தல் | | | | |
| 3 | தொகுத்தல் | | | | |
| 4 | இனங்காணல் | | | | |
| 5 | வெளிப்படுத்தல் | | | | |

| | | |
|---|---|---|
| **வகுப்பு** | **:** | **எட்டு** |
| **பருவம்** | **:** | **முதற் பருவம்** |
| **இயல்** | **:** | **இரண்டு** |
| **பாடம் : உரைநடை** | **:** | **செய்தி உருவாகும் வரலாறு** |
| **செயல்திட்டத் தலைப்பு** | **:** | **நூலக அமைப்பும் பயன்பாடும்** |
| **செயல்பாடு** | **:** | **தனியொருவர்** |

**நோக்கம் :**

- நூல் நிலையத்தைப் பற்றி அறிந்துகொள்ளுதல்
- படிக்கும் பழக்கத்தை வளர்த்தல்
- நூலகப்பயன்பாட்டினை அறிதல்
- நூலகச் செயல்பாட்டினைத் தெரிந்துகொள்ளுதல்

**கால அளவு :** 7 நாள்

**செயல்திட்ட எல்லை :** கிராம / நகரப் பொது நூலகங்கள்

**கருவிகள் :** நூலகத்திற்கு நேரில் சென்று விவரம் சேகரித்தல்

**சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் :**

- நீ நூலகத்தில் உறுப்பினராகச் சேர்ந்துள்ளாயா **?**
- நூலகத்தின் பயன்பாடு என்ன **?**
- என்னென்ன வகையான நூல்கள் நூலகத்தில் உள்ளன **?**
- நாளிதழ், வார இதழ்களின் பயன்பாடுகள் யாவை **?**
- புத்தகப் பூங்கொத்தில் தமிழ்ப்பாடத்திற்கான நூல்களை வரிசைபடுத்துக.

**செயல்படுத்தும் முறை :**

- நூலகத்திற்குச் செல்ல அனுமதி பெறுதல்
- நூலகரிடம் சென்று தகவல் சேகரிக்க படிவம் தயாரித்தல்
- நூலகத்திலுள்ள நூல்களின் எண்ணிக்கை, வகைகளைத் தெரிந்துகொள்ளுதல்
- இதழ்களைத் தொகுத்தல்
- செய்திகளைக் குறிப்பெடுத்தல்
- விரிவாக எழுதுதல்
- நூலகத்தைப் பயன்படுத்துவோர் எண்ணிக்கையை அறிந்து அறிக்கை தயாரித்தல்

**வாழ்வியல் தொடர்பு :**

- ❖ நாள்தோறும் நூலகம் சென்று படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துதல்
- ❖ நாள்தோறும் உலகச் செய்திகளை அறிந்துகொள்ளுதல்

**மதிப்பீடு, பாராட்டு :**

பின்வரும் உட்கூறுகளின் அடிப்படையில் மாணவர்களை மதிப்பீடு செய்து பாராட்டுதல்

| **வ.எண்** | **உட்கூறுகள்** | **முயற்சி தேவை** | **திருப்திகரம்** | **நன்று** | **சிறப்பு நிலை** |
|---|---|---|---|---|---|
| | | **1** | **2** | **3** | **4** |
| 1 | நூலகத்தைப் பார்வையிடல் | | | | |
| 2 | தகவல் சேகரித்தல் | | | | |
| 3 | நூல்களின் வகைப்பாட்டை அறிதல் | | | | |
| 4 | தொகுத்தல் | | | | |
| 5 | ஒப்படைப்பு | | | | |

| | | |
|---|---|---|
| **வகுப்பு** | **:** | **எட்டு** |
| **பருவம்** | **:** | **முதற் பருவம்** |
| **இயல்** | **:** | **இரண்டு** |
| **பாடம்** | **:** | **மொழித்திறன் பயிற்சி** |
| **செயல்திட்டத் தலைப்பு** | **:** | **அலுவலகக் கடிதம் எழுதுதல்** |
| **செயல்பாடு** | **:** | **தனியொருவர்** |

**நோக்கம் :**

- ➢ அலுவலகக் கடிதம் எழுதும் முறை அறிதல்
- ➢ அலுவலகக் கடிதம் எழுதும் படிநிலைகளைக் கண்டறிதல்
- ➢ கடிதம் எழுதுவதன் இன்றியமையாமையை உணர்த்துதல்

**கால அளவு :** 4 நாள்

**செயல்திட்ட எல்லை :**

விடுப்பு வேண்டி, வேலை வேண்டி, ஊர் மக்களின் தேவை வேண்டி விண்ணப்பம் எழுதுதல்

**சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் :**

- ❖ உன் மிதிவண்டி காணாமல் போனால் யாரிடம் எப்படிப் புகார் செய்வாய் ?
- ❖ நீ வாழும் பகுதிக்குத் தெருவிளக்கு வேண்டி யாரிடம் முறையிடுவாய் ?
- ❖ விடுமுறை நாள்களில் பள்ளிக்குச் சேதம் விளைவிப்பவரைத் தடுக்க யாரிடம் முறையிடுவாய் ?

**செயல்படுத்தும் முறை :**

- ➢ அலுவலகக் கடிதத்தின் படிநிலைகளை அறிதல்
- ➢ குறிப்பிட்ட தலைப்பிற்கு ஏற்றவாறு கடிதம் எழுதுதல்
- ➢ ஆசிரியரிடம் காண்பித்து இசைவு பெறுதல்
- ➢ மாணவர்களிடம் படித்துக்காட்டல்

**வாழ்வியல் தொடர்பு :**

- ❖ அலுவலகக் கடிதம் எழுதுவதற்குத் தெரிந்துகொள்ளுதல்
- ❖ பொதுப் பிரச்சினைகளுக்கு உரியவருக்குக் கடிதம் எழுதக் கற்றுக்கொள்ளுதல்
- ❖ பிறருக்குக் கடிதம் எழுத உதவுதல்
- ❖ பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வுகாணும் திறன் பெறுதல்

**மதிப்பீடு, பாராட்டு :** பின்வரும் உட்கூறுகளின் அடிப்படையில் மாணவர்களை மதிப்பீடு செய்து பாராட்டுதல்

| **வ.எண்** | **உட்கூறுகள்** | **முயற்சி தேவை** | **திருப்திகரம்** | **நன்று** | **சிறப்பு நிலை** |
|---|---|---|---|---|---|
| | | **1** | **2** | **3** | **4** |
| 1 | அலுவலகக் கடிதத்தின் படிநிலைகள் | | | | |
| 2 | செய்திகளை வெளிப்படுத்திய முறை | | | | |
| 3 | முடிக்கும் திறன் | | | | |
| 4 | ஒப்படைப்பின் ஒழுங்கு முறை | | | | |
| 5 | எடுத்துரைத்தல் | | | | |

| | | |
|---|---|---|
| **வகுப்பு** | **:** | **எட்டு** |
| **பருவம்** | **:** | **இரண்டு** |
| **இயல்** | **:** | **மூன்று** |
| **பாடம் : செய்யுள்** | **:** | **கம்பராமாயணம்** |
| **செயல்திட்டத் தலைப்பு** | **:** | **மழைநீர் சேகரிப்பு** |
| **செயல்பாடு** | **:** | **தனியொருவர்** |

**நோக்கம் :**

- மழைநீரைத் தேக்குவதன் அவசியத்தை உணர வைத்தல்
- நீர்வளத்தைப் பெருக்குவதற்கான வழிமுறைகள் அறிதல்
- இயற்கை வளங்களைப் பாதுகாத்தல்
- அவரவர் வீடுகளில் மழைநீர் சேகரிப்புத் தொட்டி அமைத்தல்
- மழைநீர் சேகரிப்புத்தொட்டி அமைக்கும் விதத்தினை அறிந்துகொள்ளுதல்

**கால அளவு :** 5 நாள்

**செயல்திட்ட எல்லை :** வீடு, பள்ளி, சுற்றுப்புறம்

**சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் :**

- குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்படுவது ஏன் ?
- நிலத்தடி நீரை மேம்படுத்தும் வழிமுறைகளைக் கூறுக.
- மழைவளம் குறைந்ததற்கான காரணங்கள் என்னென்ன ?
- மழைவளம் பெருக என்ன செய்யவேண்டும் ?
- நிலத்தடிநீர்ப் பாதுகாப்பில் உனது பங்கினைக் கூறுக.

**செயல்படுத்தும் முறை :**

- இயற்கை வளங்களைப் பற்றிய தகவல்களைத் தொகுத்தல்
- நீர்வளத்தின் அவசியத்தை உணர்தல்
- நீர்நிலைகளைப் பாதுகாப்பதற்கான வழிகளை உணர்தல்
- மழைநீரைச் சேமித்தலின் இன்றியமையாமை
- மழைநீர் சேகரிப்பிற்காக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள்
- உன் வீட்டில் மழைநீர்த்தொட்டி அமைக்கப்பட்டுள்ள முறை
- செய்திகளைத் தொகுத்தல்

**வாழ்வில் தொடர்பு :** நீரின்று அமையாது உலகு என்பதைப் புரிந்து நீரைச் சேமித்தல்

**மதிப்பீடு, பாராட்டு :**

பின்வரும் உட்கூறுகளின் அடிப்படையில் மாணவர்களை மதிப்பீடு செய்து பாராட்டுதல்

| வ.எண் | உட்கூறுகள் | முயற்சி தேவை | திருப்திகரம் | நன்று | சிறப்பு நிலை |
|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 |
| 1 | இயற்கை வளங்களைச் சேகரித்தல் | | | | |
| 2 | மழைநீரைச் சேமித்தல் | | | | |
| 3 | அரசின் மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகள் | | | | |
| 4 | செய்திகளைத் தொகுத்தல் | | | | |
| 5 | செயல்திட்டம் ஒப்படைத்தல் | | | | |

**வகுப்பு : எட்டு**

**பருவம் : இரண்டு**

**இயல் : இரண்டு**

**பாடம் : உரைநடை : நாடகக் கலை**

**செயல்திட்டத் தலைப்பு : தமிழ் நாடகக் கலைஞர்களின் வரலாற்றினைச் சேகரித்தல்**

**செயல்பாடு : குழு**

**நோக்கம் :**

- நாடகத்தின் சிறப்பை உணர்தல்
- நாடகக் கலைஞர்களின் பன்முகத்திறனைக் கேட்டறிதல்
- நலிவடைந்த நாடகக் கலைஞர்களின் வரலாற்றைச் சேகரித்தல்
- நாடகக் கலைஞர்களுக்கு அரசு செய்து வரும் நலத்திட்டங்களை அறிதல்

**கால அளவு :** 10 நாள்

**செயல்திட்ட எல்லை :** தமிழ் நாடகக் கலைஞர்களின் வரலாறு மட்டும்

**சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் :**

- தொலைக்காட்சியில் இடம்பெறும் நாடகத் தொடர்கள் ஏதேனும் இரண்டனைக் கூறுக.
- பண்டைய தமிழ் நாடகங்கள் எவ்வகைக் கருத்துகளை வெளித்தாங்கி நின்றன ?
- அறிவியல் தொழில்நுட்பம் இல்லாத காலத்தில் நாடகமேடைகள் எவ்வாறு அமைக்கப்பட்டன ?
- உனக்குத் தெரிந்த ஏதேனும் இரண்டு பண்டைய தமிழ் நாடகங்களைக் கூறுக.

**செயல்படுத்தும் முறை :**

- தமிழ் நாடகக் கலைஞர்களின் பெயர்களைக் கண்டறிதல்
- தமிழ் நாடகங்களின் பெயர்களை அறிதல்
- சிறந்த நாடகக் கலைஞர்களின் தகவல்களைச் சேகரித்தல்
- சேகரித்த தகவல்களைத் தொகுத்தல்
- செயல்திட்ட அறிக்கை அளித்தல்
- நாடகம்– திரைப்படம் வேறுபாடறிதல்

**வாழ்வில் தொடர்பு :**

அறிவியல் தொழில்நுட்பம் இல்லாத காலத்திலும் தமிழ் நாடகங்கள் மக்களிடத்தில் எத்தகைய வரவேற்பைப் பெற்றன என்பதையும், தமிழ் நாடகக் கலைஞர்கள் வறுமையிலும் செம்மையாக வாழ்கின்றனர் என்னும் வாழ்வியல் உண்மையையும் அறிந்துகொள்ள முடிகிறது.

**மதிப்பீடு, பாராட்டு :**

பின்வரும் உட்கூறுகளின் அடிப்படையில் மாணவர்களை மதிப்பீடு செய்து பாராட்டுதல்

| **வ.எண்** | **உட்கூறுகள்** | **முயற்சி தேவை** | **திருப்திகரம்** | **நன்று** | **சிறப்பு நிலை** |
|---|---|---|---|---|---|
| | | **1** | **2** | **3** | **4** |
| 1 | நாடகக் கலைஞர்களின் பட்டியல் தயாரித்தல் | | | | |
| 2 | வாழுமிடங்களை அட்டவணைப்படுத்துதல் | | | | |
| 3 | செய்திகளைத் தொகுத்தல் | | | | |
| 4 | முறைப்படுத்துதல் | | | | |
| 5 | வெளிப்படுத்தல் | | | | |

| | | |
|---|---|---|
| **வகுப்பு** | **:** | **எட்டு** |
| **பருவம்** | **:** | **இரண்டு** |
| **இயல்** | **:** | **மூன்று** |
| **பாடம் :துணைப்பாடம்** | **:** | **சென்னை அருங்காட்சியகம்** |
| **செயல்திட்டத் தலைப்பு** | **:** | **அருங்காட்சியகமும் அதன் பயன்பாடும்** |
| **செயல்பாடு** | **:** | **குழு** |

**நோக்கம் :**

- அருங்காட்சியகம் என்பதன் பொருள் அறிதல்
- பழைமையான பொருள்களின் சிறப்பறிதல்
- பழைமையான பண்பாடு, கலைகள், பாரம்பரியம் ஆகியவற்றின் தன்மை அறிதல்

**கால அளவு :** 7 நாள்

**செயல்திட்ட எல்லை :** உங்கள் மாவட்டத்தின் அருகில் அமைந்துள்ள அருங்காட்சியகம்

**சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் :**

- தொல்பொருள் ஆய்வுத்துறை என்பது யாது ?
- மண்ணிலிருந்து புதையலாகக் கிடைக்கும் சிலைகள் பழைமையான பொருள்கள் எங்கு வைக்கப்படுகின்றன ?
- செப்பேடுகள் என்றால் என்ன ?

**செயல்படுத்தும் முறை :**

- குழுவாகச் சேர்ந்து அருங்காட்சியகத்தைப் பார்வையிடல்
- அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள பொருள்களைப் பட்டியலிடுதல்
- தகவல்களைச் சேகரித்துத் தொகுத்தல்
- செயல்திட்ட அறிக்கை அளித்தல்

**வாழ்வில் தொடர்பு :**

அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள தொல்பொருள்களைக் கொண்டு தமிழரின் பண்பாடு, நாகரிகம், பழக்கவழக்கங்களை அறிதல்

**மதிப்பீடு, பாராட்டு :**

பின்வரும் உட்கூறுகளின் அடிப்படையில் மாணவர்களை மதிப்பீடு செய்து பாராட்டுதல்

| வ.எண் | உட்கூறுகள் | முயற்சி தேவை | திருப்திகரம் | நன்று | சிறப்பு நிலை |
|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 |
| 1 | அருங்காட்சியகம் பார்வையிடல் | | | | |
| 2 | வாழுமிடங்களை அட்டவணைப்படுத்துதல் | | | | |
| 3 | செய்திகளைத் தொகுத்தல் | | | | |
| 4 | முறைப்படுத்துதல் | | | | |
| 5 | வெளிப்படுத்தல் | | | | |

**வகுப்பு : எட்டு**
**பருவம் : இரண்டு**
**இயல் : ஒன்று**
**பாடம் : இலக்கணம் : தொகைநிலைத்தொடர்**
**செயல்திட்டத் தலைப்பு : உடலுறுப்புகளுக்கான உவமைச் சொற்கள்**
**செயல்பாடு : தனியொருவர்**

**நோக்கம் :**

- உவமைச் சொற்களின் சிறப்பினை உணர்தல்
- உடலுறுப்புகளுக்கான உவமைச் சொற்களை அறிந்துகொள்ளுதல்
- நடைமுறை வாழ்க்கையில் உவமைச் சொற்களைக் கையாளுதல்

**கால அளவு :** 3 நாள்

**செயல்திட்ட எல்லை :** மனித உடலுறுப்புகளுக்கான உவமைச்சொற்கள்

**சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் :**

- உவமை என்றால் என்ன ?
- தேன்மொழி என்னும் சொல்லில் இடம்பெறும் உவமை எது ?

❖ நீவீர் அறிந்துள்ள உவம உருபுகளைக் கூறுக.
❖ நீ அறிந்துள்ள உவமைச் சொற்களைக் கூறுக.

**செயல்படுத்தும் முறை :**

- உவமை என்பதன் பொருளறியச் செய்தல்
- மனித உறுப்புகளைப் பட்டியலிடுதல்
- உறுப்புகளுக்குத் தொடர்பான உவமைச் சொற்களைக் கண்டறிதல்
- பொருத்திப் பார்த்தல்
- வெளிப்படுத்துதல்

**வாழ்வில் தொடர்பு :**

உவமையை ஒத்த பொருளுடன் பொருத்தக் கற்றுக்கொள்ளுதல்

**மதிப்பீடு, பாராட்டு :**

பின்வரும் உட்கூறுகளின் அடிப்படையில் மாணவர்களை மதிப்பீடு செய்து பாராட்டுதல்

| வ.எண் | உட்கூறுகள் | முயற்சி தேவை | திருப்திகரம் | நன்று | சிறப்பு நிலை |
|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 |
| 1 | உவம உருபுகளைப் பட்டியலிடுதல் | | | | |
| 2 | உறுப்புகளைப் பட்டியலிடுதல் | | | | |
| 3 | ஒப்பிட்டுப் பொருளறிதல் | | | | |
| 4 | உவமை, பொருளைத் தொகுத்தல் | | | | |
| 5 | செயல்திட்டம் ஒப்படைத்தல் | | | | |

| | | |
|---|---|---|
| **வகுப்பு** | **:** | **எட்டு** |
| **பருவம்** | **:** | **மூன்று** |
| **இயல்** | **:** | **ஒன்று** |
| **பாடம் : செய்யுள்** | **:** | **திருக்குறள் – பண்புடைமை** |
| **செயல்திட்டத் தலைப்பு** | **:** | **நற்பண்புகளை விளக்கும் கருத்துப்படத் தொகுப்பேடு தயாரித்தல்** |
| **செயல்பாடு** | **:** | **குழுச் செயல்பாடு** |

**நோக்கம் :**

- சிறந்த நற்பண்புகளைத் தெரிந்துகொள்ளுதல்
- நற்பண்புகளின் பயன்களை உணர்தல்
- நற்பண்புகளின்படி வாழக் கற்றுக்கொள்ளல்

**கால அளவு :** 7 நாள்

**செயல்திட்ட எல்லை :**

குடும்பச்சூழல், வகுப்பறைச்சூழல், பொதுவிடங்களில் நடந்துகொள்ளும் முறைகள்

**கருவிகள் :** நற்பண்புகளை விளக்கும் படங்கள், கதைப்படங்கள்

**சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் :**

- நற்பண்புகள் எவையெனக் கூறுக.
- உன்னிடமுள்ள நற்பண்புகளைக் கூறுக.
- உனக்குப் பிடித்தவர்களிடம் காணப்படும் நற்பண்புகளை வரிசைப்படுத்துக.
- முன்னோரிடமிருந்த நற்பண்புகளுள் இரண்டனைக் கூறுக.
- உன் பெற்றோரிடம் கற்றுக்கொண்ட நற்பண்புகள் என்னென்ன ?

**செயல்படுத்தும் முறை :**

- நற்பண்புகளைப் பட்டியலிடுதல்
- நடைமுறை வாழ்க்கையில் பயன்படும் நற்பண்புகள்
- நற்பண்புகளை விளக்கும் படங்கள் சேகரித்தல்
- சேகரித்த படங்களின் கருத்தைக் குழுவில் கலந்துரையாடுதல்
- படத்தொகுப்பேடு தயாரித்து ஒப்படைத்தல்

**வாழ்வியல் தொடர்பு :**

- ❖ வாழ்க்கைக்கேற்ற சிறந்த நற்பண்புகளை வளர்த்துக்கொள்ளல்
- ❖ சமுதாயத்தோடு இணைந்து வாழக்கற்றுக்கொள்ளுதல்

**மதிப்பீடு, பாராட்டு :**

பின்வரும் உட்கூறுகளின் அடிப்படையில் மாணவர்களை மதிப்பீடு செய்து பாராட்டுதல்

| **வ.எண்** | **உட்கூறுகள்** | **முயற்சி தேவை** | **திருப்திகரம்** | **நன்று** | **சிறப்பு நிலை** |
|---|---|---|---|---|---|
| | | **1** | **2** | **3** | **4** |
| 1 | நற்பண்புகளைப் பட்டியலிடுதல் | | | | |
| 2 | படங்களைச் சேகரித்தல் | | | | |
| 3 | படத்தொகுப்புத் தயாரிப்பு | | | | |
| 4 | படத்தொகுப்பின் ஒழுங்கு | | | | |
| 5 | ஒப்படைப்பின் ஒழுங்கு | | | | |

**வகுப்பு : எட்டு**

**பருவம் : மூன்று**

**இயல் : மூன்று**

**பாடம் : உரைநடை : இலக்கியத்தில் நகைச்சுவை**

**செயல்திட்டத் தலைப்பு : மெய்ப்பாடுகளை உணர்த்தும் படத்தொகுப்புத் தயாரித்தல்**

**செயல்பாடு : தனியொருவர்**

**நோக்கம் :**

- எண்வகை மெய்ப்பாடுகளை அறிந்துகொள்ளுதல்
- வாழ்க்கையில் மெய்ப்பாட்டின் அவசியத்தை உணர்த்துதல்

**கால அளவு :** 5 நாள்

**செயல்திட்ட எல்லை :** வகுப்பறை, வீட்டுச்சூழல், சுற்றுப்புறம்

**சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் :**

- ❖ மெய்ப்பாடுகள் எத்தனை ?
- ❖ உன்னிடம் அதிகமாகக் காணப்படும் மெய்ப்பாடுகள் என்னென்ன ?
- ❖ நீ விரும்பும் மெய்ப்பாடு எது ?
- ❖ நீ வெறுக்கும் மெய்ப்பாடு எது ?

**செயல்படுத்தும் முறை :**

- ➢ எண்வகை மெய்ப்பாட்டுணர்வுகளைப் புரியவைத்தல்
- ➢ மெய்ப்பாட்டிற்கான படங்களைச் சேகரித்தல்
- ➢ மெய்ப்பாடுகளை உணர்த்தும் கார்ட்டூன் படங்களை வரைதல்
- ➢ முறையான படத்தொகுப்பேடு தயாரித்தல்
- ➢ காட்சிப்படுத்துதல்

**வாழ்வியல் தொடர்பு :**

- ❖ உணர்வுகளைத் தேவையான இடங்களில் சரியாகப் பயன்படுத்தக் கற்றுக்கொள்ளுதல்

**மதிப்பீடு, பாராட்டு :**

பின்வரும் உட்கூறுகளின் அடிப்படையில் மாணவர்களை மதிப்பீடு செய்து பாராட்டுதல்

| **வ.எண்** | **உட்கூறுகள்** | **முயற்சி தேவை** | **திருப்திகரம்** | **நன்று** | **சிறப்பு நிலை** |
|---|---|---|---|---|---|
| | | **1** | **2** | **3** | **4** |
| 1 | மெய்ப்பாடுகளை அறிதல் | | | | |
| 2 | நிலைமொழி, வருமொழி புரிந்துகொள்ளல் | | | | |
| 3 | இணைத்துப்பார்த்த முறை | | | | |
| 4 | ஒப்பிடல் | | | | |
| 5 | வெளிப்படுத்துதல் | | | | |

| | | |
|---|---|---|
| **வகுப்பு** | **:** | **எட்டு** |
| **பருவம்** | **:** | **மூன்று** |
| **இயல்** | **:** | **இரண்டு** |
| **பாடம் : உரைநடை** | **:** | **காட்டுயிரிகள்** |
| **செயல்திட்டத் தலைப்பு** | **:** | **விலங்குகளின் வாழ்வியல் முறைகள்** |
| செயல்பாடு | : | குழு |

**நோக்கம் :**

- உயிரிகளின் தன்மையையும், அதன் வாழ்வியல் முறையையும் அறிந்துகொள்ளுதல்

**கால அளவு :** 10 நாள்

**செயல்திட்ட எல்லை :** வீட்டில் வளர்க்கப்படும் உயிரிகள், காட்டில் வளரும் உயிரிகள்

**சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் :**

- உயிருள்ள, உயிரற்ற பொருள்கள் நான்கனைக் கூறுக.
- தொல்காப்பியர் உயிரினங்களை எவ்வாறு வகைப்படுத்துகிறார் ?
- உயிரினங்கள் வாழும் இடங்கள் யாவை ?
- உண்ணும் உணவுவகை விலங்கினத்திற்கு விலங்கினம் மாறுபடுவது ஏன் ?

**செயல்படுத்தும் முறை :**

- வீட்டில் வளர்க்கும் விலங்கினங்களைப் பட்டியலிடச் செய்தல்
- காட்டில் வாழும் விலங்கினங்களைப் பட்டியலிடச் செய்தல்
- காட்டு விலங்குகள், வீட்டு விலங்குகள் ஆகியவற்றிற்கிடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டறிதல்
- வாழும் முறைகள் உண்ணும் உணவுகள் முதலிய தகவல்களைச் சேகரித்தல்
- சேகரித்த தகவல்களை முறைப்படுத்திச் செயல்திட்டமாக அளித்தல்
- உயிரினங்களின் வாழுமிடங்களை முறையாகத் தெரிந்துகொள்ளல்

**வாழ்வில் தொடர்பு :**

தட்பவெப்பச் சூழலுக்கேற்ப உயிரினங்கள் தாங்கள் வாழும் இடங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்கின்றன என்னும் வாழ்வியல் உண்மையை அறிதல்

**மதிப்பீடு, பாராட்டு :**

பின்வரும் உட்கூறுகளின் அடிப்படையில் மாணவர்களை மதிப்பீடு செய்து பாராட்டுதல்

| வ.எண் | உட்கூறுகள் | முயற்சி தேவை | திருப்திகரம் | நன்று | சிறப்பு நிலை |
|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 |
| 1 | விலங்கினங்களை வேறுபடுத்துதல் | | | | |
| 2 | வாழுமிடங்களை அட்டவணைப்படுத்துதல் | | | | |
| 3 | செய்திகளைத் தொகுத்தல் | | | | |
| 4 | முறைப்படுத்துதல் | | | | |
| 5 | வெளிப்படுத்தல் | | | | |

**வகுப்பு : எட்டு**

**பருவம் : மூன்று**

**இயல் : இரண்டு**

**பாடம் : துணைப்பாடம் : மகிழ்ச்சிக்கான வழி**

**செயல்திட்டத் தலைப்பு : பயன்தரும் பொழுதுபோக்கு**

**செயல்பாடு : தனியொருவர்**

**நோக்கம் :**

- மகிழ்ச்சியாக வாழ்வதன் அவசியத்தை உணர்தல்
- மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப மகிழ்ச்சிதரும் செயல்பாடுகளை அறிதல்
- மன அழுத்தத்தைக் குறைத்தல்
- நேரத்தைப் பயனுள்ளதாக மாற்றுதல்

**கால அளவு :** 7 நாள்

**செயல்திட்ட எல்லை :**

- புத்தக வாசிப்பு, விளையாட்டு, பிறருக்கு உதவி செய்தல், தோட்டங்களைப் பராமரித்தல்
- முதியோர், அனாதை மற்றும் சிறுவர் இல்லங்களைப் பார்வையிடல்

**சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் :**

- உனது பொழுதுபோக்குச் செயல்பாடுகளைப் பட்டியலிடுக.
- உன் வீட்டிலுள்ள பெரியவர்களுக்கு உதவி செய்கிறாயா ?

❖ புத்தகங்களைப் படிக்கும் பழக்கம் உண்டா ?
❖ முதியோர், அனாதை மற்றும் சிறுவர் இல்லங்களுக்குச் சென்றுள்ளாயா ?

**செயல்படுத்தும் முறை :**

➢ பொழுதுபோக்குச் செயல்களைப் பட்டியலிடுதல்
➢ செயல்திட்ட எல்லையில் உள்ள இடங்களுக்குச் சென்று பார்வையிடல்
➢ பார்வையிட்டுச் செய்திகளைச் சேகரித்தல்
➢ முதியோர் இல்லங்களுக்குச் சென்று கலந்துரையாடல்
➢ தொகுத்தல்

**வாழ்வியல் தொடர்பு :**

❖ சமுதாயத்தில் அனைவரையும் மதித்து உதவி செய்யக் கற்றுக்கொள்ளுதல்
❖ நேரத்தைப் பயனுள்ள வகையில் செலவழித்தல்

**மதிப்பீடு , பாராட்டு :**

பின்வரும் உட்கூறுகளின் அடிப்படையில் மாணவர்களை மதிப்பீடு செய்து பாராட்டுதல்

| **வ.எண்** | **உட்கூறுகள்** | **முயற்சி தேவை** | **திருப்திகரம்** | **நன்று** | **சிறப்பு நிலை** |
|---|---|---|---|---|---|
| | | **1** | **2** | **3** | **4** |
| 1 | பொழுதுபோக்குச் செயல்களைப் பட்டியலிடுதல் | | | | |
| 2 | நேரடியனுபவங்களைப் பெற்ற முறை | | | | |
| 3 | அனுபவங்களின் பயன்பாடு | | | | |
| 4 | தொகுத்த முறை | | | | |
| 5 | வெளிப்படுத்துதல் | | | | |

**வகுப்பு : எட்டு**

**பருவம் : மூன்றாம் பருவம்**

**இயல் : ஒன்று**

**பாடம் : செய்யுள் : திருக்குறள் – பண்புடைமை**

**செயல்திட்டத் தலைப்பு : நற்பண்புகளை விளக்கும் கருத்துப்படத் தொகுப்பேடு தயாரித்தல்**

**செயல்பாடு : குழு**

**நோக்கம் :**

- சிறந்த நற்பண்புகளைத் தெரிந்துகொள்ளுதல்
- நற்பண்புகளின் பயன்களை உணர்தல்
- நற்பண்புகளின்படி வாழக் கற்றுக்கொள்ளல்

**கால அளவு :** 7 நாள்

**செயல்திட்ட எல்லை :**

குடும்பச்சூழல், வகுப்பறைச்சூழல், பொதுவிடங்களில் நடந்துகொள்ளும் முறைகள்

**கருவிகள் :** நற்பண்புகளை விளக்கும் படங்கள், கதைப்படங்கள்

**சிந்தனையைத் தூண்டும் வினாக்கள் :**

- நற்பண்புகள் எவையெனக் கூறுக.
- உன்னிடமுள்ள நற்பண்புகளைக் கூறுக.
- உனக்குப் பிடித்தவர்களிடம் காணப்படும் நற்பண்புகளை வரிசைப்படுத்துக.
- முன்னோரிடமிருந்த நற்பண்புகளுள் இரண்டனைக் கூறுக.
- உன் பெற்றோரிடம் கற்றுக்கொண்ட நற்பண்புகள் என்னென்ன ?

**செயல்படுத்தும் முறை :**

- நற்பண்புகளைப் பட்டியலிடுதல்
- நடைமுறை வாழ்க்கையில் பயன்படும் நற்பண்புகள்
- நற்பண்புகளை விளக்கும் படங்கள் சேகரித்தல்
- சேகரித்த படங்களின் கருத்தைக் குழுவில் கலந்துரையாடுதல்
- படத்தொகுப்பேடு தயாரித்து ஒப்படைத்தல்

**வாழ்வியல் தொடர்பு :**

- வாழ்க்கைக்கேற்ற சிறந்த நற்பண்புகளை வளர்த்துக்கொள்ளல்
- சமுதாயத்தோடு இணைந்து வாழக்கற்றுக்கொள்ளுதல்

❖ தொடர் என்றால் என்ன ?
❖ உனக்குத் தெரிந்த தொடர்களைக் கூறுக.
❖ கணினியில் தமிழ் எழுத்துகளைத் தட்டச்சு செய்யத் தெரியுமா ?

**செயல்படுத்தும் முறை :**

➢ கணினியை இயக்கத் தெரிந்த மாணவர்களைத் தெரிவுசெய்தல்
➢ குறிப்பிட்ட பாடத்தலைப்புக்கு மின் நழுவம் தயார் செய்ய அறிவுரை வழங்குதல்
➢ தயாரித்த மின் நழுவங்களைச் சரிபார்த்தல்
➢ தயாரித்த மின் நழுவங்களைப் பயன்படுத்துதல்

**வாழ்வியல் தொடர்பு :**

❖ நடைமுறை வாழ்க்கையில் கணினியின் தேவையை உணரச்செய்தல்
❖ தகவல்களை இணைக்கும் வல்லமை பெறுதல்
❖ சிறப்பான தகவல் தொடர்பு பெறுதல்
❖ புதிய சிந்தனைத் திறனை வளர்த்தல்
❖ புதிய தொழில்நுட்பத்தை மொழிப்பாடத்தில் பயன்படுத்துதல்

**மதிப்பீடு , பாராட்டு :**

பின்வரும் உட்கூறுகளின் அடிப்படையில் மாணவர்களை மதிப்பீடு செய்து பாராட்டுதல்

| வ.எண் | உட்கூறுகள் | முயற்சி தேவை | திருப்திகரம் | நன்று | சிறப்பு நிலை |
|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 |
| 1 | கருத்தினை வைத்துள்ள முறை | | | | |
| 2 | நழுவங்களின் பொருத்தப்பாடு | | | | |
| 3 | கருத்தை வரிசைபடுத்திய முறை | | | | |
| 4 | அனிமேசன் (இயங்குரு படம்) | | | | |
| 5 | வெளிப்படுத்தல் | | | | |